[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1995 நவம்பர் 7

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாகத் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் பொதுவான நிலையங்களை அமைக்கும் பொருட்டு ரூ. 2.68 கோடி கூடுதலாக வழங்கப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 53 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு" என்கிற தலைப்பின் கீழ்த் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பேருந்துகளை வாங்குவதற்குரிய நிதியுதவியாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ. 24.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 61 – மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்கிற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்கள் குறித்தும், உரிய முழு விவரங்களும் இப்பேரவையில் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் * விரிவாக இடம் பெற்றுள்ளன. இத்துடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்.

பிற்பகல் 12-05

8. அறிவிப்புகள்

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95- வெட்டுத்தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995-96 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையில் 190-வது விதிக்கிணங்க 8-11-1995, புதன்கிழமை, மாலை 3.00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* 6-11-1995ஆம் நாளன்று அவையில் வைக்கப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS